கவன ஈர்ப்புகள்

(திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்)

இருக்கலாம். அது பெரிய துணை மின் நிலையம் ஏற்படுத்து கின்ற திட்டம் அல்ல ; சிறிய டிரான்ஸ்பார்மர் ஏற்படுத்துகின்ற திட்டம். எனவே, அது மிக அவசியமாக இருக்கிற காரணத் தாலே, கடந்த 3 ஆண்டுகாலமாக அந்தப் பிரச்னை அங்கே இருக்கிறது. அது விரைவில் மேற்கொள்ளப்படுமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, விரைவில் தீர்க்கப்படும். 3 ஆண்டுகள் என்று குறிப் பிட்டதுதான் தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேளை 4 ஆண்டுகளாக இருக்கலாம்.

(17) வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரைப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, '' வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை ஆலை யைப் பயன்படுத்துவோர் கரும்பு அரைக்க சுமார் 15 முதல் 16 மாதங்கள் ஆவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவைக்காக பதிவு செய்யப்பட்ட 9933 ஏக்கரில் 15-4-1986 முடிய 6,393 ஏக்கர் அறுவடை செய்யப்பட்டு அந்த ஆலையிலேயே அரவை செய்யப் பட்டது. மீதமுள்ள 3,540 ஏக்கர் கரும்பும், ஜூன் 1986 இறுதிக் குள் அறுவடை செய்யப்பட்டு அவ்வாலையில் அரவை செய்யப் பட்டுவிடும். இந்த 3,540 ஏக்கர் கரும்பில் 340 ஏக்கர் கரும்பு கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலும், 1,568 ஏக்கர் கரும்பு ஏப்ரல் மாதத்திலும் நடவு செய்யப்பட்டதாகும். ஆகவே வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை செய்ய 15 அல்லது 16 மாதங்கள் சாதாரணமாக ஆகிறது என்ற கூற்று சரி என்று சொல்வதற்கில்லை. கடந்த ஆண்டு ஆலையின் தேவைக்கதிகமாக கரும்பு சாகுபடி செய்ததன் விளைவாக, மேற்படி கரும்பை வெட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அந்தந்த மாதத் தேவைக் கேற்ப கரும்பை சாகுபடி செய்யாத தாலும், தேவைக்கதிகமாக சாகுபடி செய்ததாலும், வெட்டு உத்திரவை சரியான காலத்தில் கொடுக்க முடியவில்லை. மேலும்

கவன ஈர்ப்புகள்

திரு. கா. இராசாராம்

1,500 ஏக்கர் உபரி கரும்பை அருகிலுள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கொடுக்க ஏற்கனவே சர்க்கரைத் துறை இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அளிக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே 15 மாதங்கள், 16 மாதங்கள் ஆகின்றது என்கின்ற நிலைக்கு விளக்கமாக இங்கே பதில் சொல்லவில்லை. இருந்தாலுங்கூட, அங்கே அரவைப் பயன்படுத்துகின்ற அரவையாளர்களுக்கு ஏறக்குறைய 15, 16 மாதங்கள் ஆகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆற்காடு, ஆரணி, செய்யாறு வட்டங்களைச் சேர்த்து, அந்தப் பகுதியிலேயிருக்கிற மாம்பாக்கம் பகுதியிலே, தமிழ் நாடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுடைய பி. பிளாண்டை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

(18) எண்ணூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. ரகுமான்கான் அவர்கள், ''சென்னை மணலியில் உள்ள எண்ணூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கழிவு வாயு வெளியாகும் குழாய் வழியாகத் திடீரென்று திராவகமும் தாரும் வெளியேறி தீப்பிடித்தது குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர அறிவிப்பு கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லை.

அறிக்கை

29-4-1986 அன்று தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் (Chief Inspector of Factories) எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை பார்வையிட்டு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின்—தொழிற்சாலை எண் 1 (Plant I) 17-4-1986 அன்று பராமரிப்புக்காக மூடப்பட்டது. பராமரித்த பிறகு மறுபடியும் தொழிற்சாலையில் இயந்திரத்தை ஆரம்பிக்கும் போது தொழிற்சாலையில் பயன்படாத காற்றுடன் எண்ணெயும் மேல் உச்சிக்கு அனுப்பப்பட்டது. அப்போது, வெளியேற்றும் தொட்டி உடைந்து அதிலிருந்து திரவ எண்ணெயும் பயன்படாத காற்றும் (Waste Gas) எல்லா இடங்களிலும் சிதறி அங்கு வளர்ந்துள்ள புல் தரையில் தீப்பிடித்துவிட்டது. வெளியேற்றும் தொட்டியில் "(Knockout Tank) அன்று அளவுக்கு அதிகமான எண்ணெயும் காற்றும் வெளியேறியதுதான் தீப்பிடித்த